மனதில் வைத்துக்கொண்டு தக்கவாறு நான் செயல்படுவேன் என்று கூறி இது குறித்து நான் மேலும் இப்போது ஒன்றும் சொல்வதற்கு இல்லை என்று மட்டும் தெரிவிப்பதன் வாயிலாக இதற்கு ஒருமுடிவுக்கு வந்து அடுத்த அலுவலுக்குப் போகிறேன்.

(ஆ) தமிழ்ப்புத்தாண்டு தினத்தன்று பேராவூரணியில் நடைபெற்ற இலவச அரிசி வழங்கும் விழா ஏற்பாடுகள் குறித்து.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் அரிசி வழங்குகின்ற விழா வருட பிறப்பு அன்று நடத்துவதற்கு அனைத்து சட்ட மன்ற உறுப்பினர்களும் கட்சி மாறுபாடு இன்றி அனைவரும் அரிசி வழங்குகின்ற விழாவில் பயன் படுத்தப்பட வேண்டும் என்ற உத்தரவினை பிறப்பித்து இருப்பதாக இங்கே சொன்னார்கள்.

(முற்பகல் 10-50)

நான் வருடப் பிறப்பன்று காலை, டிரெயின் சற்று தாமதமாகப் போன காரணத்தினால், 9.15 மணிக்கு பேராவூரணி நகரத்திலே இறங்கி, நான் குளிக்காமல் உடனடியாக சைக்கிளை எடுத்துக்கொண்டு அந்த இடத்திற்கு ஓடோடி சென்றேன். அதற்கு முன்னதாகவே 8.30 மணிக்கெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக கட்சிக்காரர்கள் அரிசி வழங்கும் விழாவை நடத்தி விட்டார்கள் என்று கேள்விப்பட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா இடத்திலும் 8.00 மணிக்குத் தொடங்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் 8.00 மணிக்குத் தொடங்கப்பட்டது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதனால் யார் நடத்தினார்கள் என்பதல்ல, என்ன நேரத்தில் நடத்தினார்கள் என்பதிலும் தவறு ஒன்றும் இல்லை.

திரு. ஆர். சிங்காரம் : முன்னதாகவே அரிசி வழங்கி விட்டார்கள். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் குளித்து விட்டே போய் இருக்கலாம் என்பது என்னுடைய கருத்து (சிரிப்பு).

திரு. ஆர். சிங்காரம் : அவசரமாகப் போக வேண்டும், டிலே ஆகக்கூடாது மக்கள் காத்திருப்பார்கள் என்பதற்காகத் தான் நான் அப்படிச் சொன்னேனே தவிர வேறு ஒன்றுமல்ல. அவசர நிமித்தமாக அப்படிச் சென்றேன். அதற்குள்ளாக அங்கே கட்சிக்காரர்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து அதிகாரிகளை வற்புறுத்தி, என்ன சட்டமன்ற உறுப்பினர்? நாங்கள் தான் சட்டமன்ற உறுப்பினர்கள் என்று கூறி அரிசி வழங்கி

விட்டார்கள். எனக்கு இழைக்கப்பட்ட அவமானம் இது மேலும் என்னுடைய தொகுதியில் எல்லா இடங்களிலும் கட்சிக் கொடிகளை அங்காடிகளில் கட்டி அதை ஒரு கட்சி விழாவாகவே நடத்தினார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இதுபோன்று இனிமேல் செய்யாமல் இருக்க ......(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேட்டுக் கொள்கிறீர்கள். (குறுக்கீடு) அது அவைக்குத் தெரியும். தேவைப்படுகின்றபோது பதில் சொல்வார்கள். இதைக் கவன ஈர்ப்பாகவே சிலபேர் கொடுத்து இருக்கிறார்கள். அதுபற்றி வரும்போது கூட விரிவாகப் பேசலாம், உட்காருங்கள்.

திரு. ஆர். சிங்காரம்: மேலும் அந்த அரிசி வழங்குவதில், 300 ரூபாய்க்கு கீழே உள்ளவர்களுக்கெல்லாம் அரிசி வழங்கப்படும் என்று சொன்னார்கள். 300 ரூபாய்க்கு கீழே உள்ளவர்கள்....(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு மானியத்தின் மீது இது விவாதிக்கப்படவிருக்கிறது. அப்போது நீண்ட நேரம் பேசலாம். உறுப்பினர் குளித்துவிட்டு வந்தே பேசலாம். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உணவு மானியத்தின் மீது பேசும்போது தன்னுடைய உணர்வை முழுமையாகக் காட்டி பேசுமாறு மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரத்திற்கு அனுமதி வழங்கப்படுகிறது. இப்போது திரு. பீட்டர் ஆல்போன்ஸ் பேசுவார்.

(இ) இலங்கைப் பிரச்சினை பற்றிய பேச்சு வார்த்தையை மீண்டும் தொடங்க இருப்பதாக வந்துள்ள செய்தி குறித்து.

***திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புயலுக்கும் இடிக்கும் இடையில் நான் ஒரு இனிப்பான செய்தி வைத்திருக்கிறேன். உலக தமிழ் சமுதாயத்தின் இதயத்தை இறுக்கி நெஞ்சத்தை உலுக்கிக் கொண்டிருந்த ஒரு பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்கிற நம்பிக்கையொளி நேற்றைய முன்தினம் பிறந்திருக்கிறது. இலங்கையிலே போராடிக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகள் இலங்கையினுடைய ஜனாதிபதி பிரேமதாசா அவர்களைச் சந்தித்து பேச்சு வார்த்தையின் மூலம் தீர்வு காண முன்வந்திருப்பது நிச்சயமாக தமிழ்த்தாயின் கண்ணீரைத் துடைக்கும் புதிய முயற்சி என்பதை நாம் எல்லோரும் ஒத்துக் கொள்கிறோம். இந்த மிகப் பெரிய தடைகளையும் சிக்கல்களையும் கடந்து பேச்சு வார்த்தை மூலம் இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்ற நிலையை உருவாக்கிய மூன்று பெருமைமிகு இந்தியர்களை